உ

சிவமயம்.

நீதிச்சிந்து யென்னும்

பெண்புத்திமாலை

# தடிக்கழுதைபாட்டு.

## ஆண்பிள்ளை வீண்பிள்ளை சிந்து.

—— *( ——

இஃது சிதம்பரம்

நடராஜசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சக்கரவர்த்தி அண்டு கம்பெனியாரால்

சென்னை

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

———

1915.

நெ. 13, நம்புலையர் தெருவு—மதறாஸ்.

உ

கடவுள் துணை.

நீதிச்சிந்து யென்னும்

# பெண்புத்திமாலை.

அன்னைத்தந்தைகளை தெய்வமென்றே தினம்
அன்பாயுபசரிப்பாள் பதிவிரதை
இன்னிலத்தினில்கெட்ட துரோகியெனும்பேரை
எற்றுக்கொள்வாள்மூடதடிக்கழுதை. 1

சொந்தக்கணவனொரு அந்தகனானாலும்
வந்தனைசெய்திடுவாள் பதிவிரதை
சிந்தையில்வெவ்வேறு எண்ணத்தால்கணவனை
சீறித்திரிபவள்கெட்ட தடிக்கழுதை 2

தனதுகணவன்மூட தடியனாயிருந்தாலும்
தன்மையுடனிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
மனதுக்கிசைந்தநல்ல மன்னனாயிருந்தாலும்
மதியாமல்பேசிடுவாள் தடிக்கழுதை 3

மாமியாரடித்தாலும் நாம்செய்தகுற்றமென்று
மவுனமாயிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
சாமியாரைப்போல யாரையுமதியாமல்
சண்டைக்கிழுப்பவளே தடிக்கழுதை 4

கணவன்சம்பாதனையைக் கண்டுசம்சாரத்தில்
கருத்தாயிருப்பவளே பதிவிரதை-இல்லாமல்

கணவனைமதியாமல் கண்டபடியழித்து
கடன்காரனாக்குவாள் தடிக்கழுதை 5

தண்ணிக்குப்போனாலும் தன்னடிபிசகாமல்
தலைகுனிந்துபோவாள் பதிவிரதை-இல்லாமல்
என்னத்தொழிலாக தெருவில்வந்தாலும்சண்டை
என்னதென்றேடுவாள் தடிக்கழுதை 6

அன்னியபுருஷர்மெத்த அழகாயிருந்தாலும்
ஆசைவையாள்நல்ல பதிவிரதை-இல்லாமல்
என்னசாதியாயிருந்தாலும் புருஷர்மேல்
இச்சைகொண்டுத்திரிவாள் கடிக்கழுதை 7

கொண்டையில்மலர்சூடி தெருவேகவொண்ணாதென்று
கூச்சத்துடனிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
செண்டுப்பூவானாலும் கொண்டையில்முடித்துத்
தண்டுத்தனங்கள்செய்வாள் தடிக்கழுதை 8

கொண்டகணவன்மாமி மாமனாரடித்தாலும்
குறுக்கப்பேசாதிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
லண்டத்தனமாகச் சண்டைக்கிழுத்தவர்கள்
மானங்கெடுத்திடுவாள் தடிக்கழுதை 9

காலையிலெழுந்து கணவனடிபணிந்து-அவன்
கருத்தைப்போலேநடப்பாள் பதிவிரதை-இல்லாமல்
வேலைக்குசோம்பலாய் பாயில்படுத்தபடி
வீண்பொழுதைகழிப்பாள் கடிக்கழுதை 10

அங்கம்பசித்தொருவர் அபயமென்றுவந்தால்
அன்பாயுபசரிப்பாள் பதிவிரதை-இல்லாமல்

தங்கவொட்டாமலே சீரித்தெருவில்நெட்டித்
தள்ளப்போவாள்மூட தடிக்கழுதை 11

அண்டைவீடெதிர்வீடு அருமுகமானாலும்
அகத்தைவிட்டுப்பிரியாள் பதிவிரதை-இல்லாமல்
லண்டசிநேகஞ்செய்து கண்டவிடந்திரிந்து
சண்டையிழுத்திடுவாள் தடிக்கழுதை 12

கட்டினதாலி கயரோடிருந்தாலும்
கணவனைவெருக்காள் பதிவிரதை-இல்லாமல்
மட்டித்தடியனென்னை கட்டினநாள்முதல்
மரம்போலிருந்தேனென்பாள் தடிக்கழுதை 13

வாசற்படிகடந்தால் வருங்குற்றநமக்கென்று
வண்மையாயுள்ளிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
பேசஅயல்வீடு யெங்குங்கலகத்தை
பெருகச்செய்துவருவாள் தடிக்கழுதை 14

குடும்பங்கலையாமலே கூட்டமாயெல்லோரும்
கூடியிருக்கச்செய்திடுவாள் பதிவிரதை-இல்லாமல்
நடுங்கயெல்லோரையும் பேசிகுடும்பமதை
நாலாய்க்கலைத்திடுவாள் தடிக்கழுதை 15

அழகிலாக்கணவனா யிருந்தாலும்அவனன்றி
யன்னியனைநாடாள் பதிவிரதை-இல்லாமல்
வொழுங்காயொருவன்வரக் கண்டாலவனைத்தேடி
ஒருமித்துசேர்ந்திடுவாள் தடிக்கழுதை 16

கதிரவனுதிக்குமுன் காலைக்கடன்முடித்து
கணவனெதிர்வருவாள் பதிவிரதை-இல்லாமல்

பிரதிதினமுங்கணவன் பிதட்டினாலும்பெருந்
திண்டுபோல்தூங்குவாள் தடிக்கழுதை 17

அரஞ்செயவிரும்பென் அவ்வையுரைத்தமொழி
அணுவளவும்பிசகாள் பதிவிரதை-இல்லாமல்
தரும்பிச்சையைக்கூடத் தடுத்துவேண்டாமென்று
தானுங்கொடுக்கவொண்ணாள் தடிக்கழுதை 18

உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகென்ப
துண்மையெனநடப்பாள் பதிவிரதை-இல்லாமல்
கண்டபாட்டுகள் ஆட்டங்கள்பார்க்கவும்
கைவிரித்துதிரிவாள் தடிக்கழுதை 19

ஊருடன்பகைக்கின் வேருடன்கெடுமென்ற
உண்மையையறிந்துகொள்வாள் பதிவிரதை-இல்லாமல்
ஆராகிலும்சரி வாங்கள்வெளியேயென்று
அதட்டிதிரிந்திடுவாள் தடிக்க்ழுதை 20

சக்காளத்தியீன்ற பிள்ளையாயிருந்தாலும்
சமமாய்ப்பார்த்திருப்பாள் பதிவிரகை-இல்லாமல்
மிக்கஒழுக்கமுள்ள சேயனாயிருந்தாலும்
மெலியமிரட்டிடுவாள் தடிக்கழுதை 21

யிரப்பவர்க்குபிச்சை யிடவேணுமென்பதை
எண்ணிநடந்திடுவாள் பதிவிரதை—இல்லாமல்
வரக்கண்டவுடனிங்கு வைத்திருக்குதோவென்று
வாதுசெய்தோட்டுவாள் தடிக்கழுதை 22

பணிகளிருந்தாலும் அணிந்துவெளியிய்வந்து
பாதையில்நடக்காள் பதிவிரதை-இல்லாமல்

துணியாகிலும்ஒழுங்கா யலங்கரித்துக்கொண்டு
சொகுசாய்திரிந்திடுவாள் தடிக்கழுதை 23

இன்னிலாடத்தைகயை சொன்னேன்முனிசாமி
இதைத்தெரிந்துகொள்வாள் பதிவிரதை-இல்லாமல்
என்னபாட்டுஇதை அச்சிலிட்டாரென்று
என்னைப்பழிப்பவளே தடிக்கழுதை. 24

பெண்புத்திமாலை-முற்றிற்று.

---

## ஆண்பிள்ளை வீண்பிள்ளை சிந்து.

காப்பு-வெண்பா.

சீராருலகினர்தந் தீயநெறிமாற்றிப்
பேரார்நன்னெறிவிளங்கப் பேசுதற்கிங்-கேராரும்
மும்மலமும்முச்சுடரும் முப்பாலுக்கப்பாலுஞ்
செம்மலிணைத்தாளிணையே சேர்.

கண்ணிகள்.

சீர்மல்கியசராசரமாயெழிற்
சிவமதைச்சேர்ந்தவ ஆண்பிள்ளை
உயர்தவமதிற்சார்ந்தவ ஆண்பிள்ளை
பார்வருஉடலமாம் மனமதுகொண்டு
பர்வத்திலுழன்றவன் வீண்பிள்ளை
சத்துச்சித்தானந்தமாகியபரவெளி
தன்னையறிந்தவ ஆண்பிள்ளை
மெய்யிற்றன்னையறிந்தவ ஆண்பிள்ளை

முத்திமுதல்வனை யணியாமல்நாடோறும்
மூடமாய்த்திரிந்தவன் வீண்பிள்ளை
மும்மலமுங்கடந்த மூர்த்தியினருள்பெற
முனைந்துதிரிந்தவ னாண்பிள்ளை
மனங்கனிந்துபரிந்தவ னாண்பிள்ளை
இம்மகிதலவாழ்வை சதமெனவெண்ணியே
யேங்கியலைந்தவன் வீண்பிள்ளை
நாலிரண்டுக்குமெட்டா நாதன்திருவடியை
நாலைத்துணிந்தவ னாண்பிள்ளை
வினைவாடப்பயந்தவ னாண்பிள்ளை
பாலினுமின்சொலாய் பாவையர்களாகிப்
பரிவுகொண்டலைந்தவன் வீண்பிள்ளை
ஆதிமூலமேயென்று ஓதுங்கஜேந்திரனுக்
கருளியதையறிந்தோ னாண்பிள்ளை
மறுத்திருளறவேபுரிந்தோ னாண்பிள்ளை
பாதகனாய்ப்புவியில் வீணர்கடமைக்கூடி
பாதகர்களைப்பழித்தோன் வீண்பிள்ளை
ஆதியனாதிசோதியாய்நின்றிலங்கும்
அய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஒளிர்மெய்யயனையறிந்தவ னாண்பிள்ளை
ஓதியுணராமல்மாதரைக்கூடி
யுறக்கத்திலலைந்தவன் வீண்பிள்ளை
பஞ்சரக்கூட்டினி லிருந்துநடனமிடும்
பரமனையறிந்தவ னாண்பிள்ளை
தன்திறமையால்தெரிந்தவ னாண்பிள்ளை

## ஆண்பிள்ளை வீண்பிள்ளை சிந்து.

வஞ்சனைசெய்மடமாதர்கள் மயக்கத்தில்
வாடிவிழிப்பவனே — வீண்பிள்ளை
சந்தக்சடாட்சர சங்கரனேயென்று
சாற்றித்திரிந்தவ — ஆண்பிள்ளை
நித்தம்போற்றித்திரிந்தவ — ஆண்பிள்ளை
சுந்தரஞ்சேர்மட மாதர்கள்மையலால்
சோர்வுற்றலைந்தவன் — வீண்பிள்ளை
மெய்யடியார்களைக் கண்டேயடியணிந்து
மேவிநடப்பவ — ஆண்பிள்ளை
மலர்தூவிவிடுப்பவ — ஆண்பிள்ளை
வையகமீதினில் வீணரைக்கூடி
மதிகெட்டலைபவன் — வீண்பிள்ளை
சத்திரஞ்சாவடி சாலைகள்சோலைகள்
தானமைத்திட்டவ — ஆண்பிள்ளை
கொடுங்கான் திரிந்திட்டவ — ஆண்பிள்ளை
சித்திரவிலைமாதர்கள் மெச்சிடமேடைகள்
செம்பொனளித்தவன் — வீண்பிள்ளை
தேவாலயங்களும் திகழ்மாடங்களுங்கண்ட
தேசங்கள்திரிந்தவ — ஆண்பிள்ளை
நல்லோர்கள்வாசங்கள்புரிந்தவ — ஆண்பிள்ளை
பாவாணர்களுக்குப் பத்தர்க்குமோசஞ்சொல்லி
பலகால்திரியச்செய்தோன் — வீண்பிள்ளை

ஆண்பிள்ளை-வீண்பிள்ளைசிந்து-முற்றிற்று.

———